# உடன் உதவும் பயில்வுச் செயலட்டை

## க.பொ.உயர்தரம் - தமிழ் - சங்கப்பாடல் - 05 - நேரம்:30 நிமிடம்

## வினாப்பத்திரம்

**தயாரிப்பு :திரு.எ.த.ஜெயரஞ்சித்**

BA. (Hons), M.A. (Tamil), Dip.in.Edu. (Merit Pass),Dip.in.Office Administration (First class),
Dip.in.Tamil(Colombo Tamil sangam),Dip.in.School Management(NIE)

**01.** மேல்வரும் செய்யுளை வாசித்து அவற்றின்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

**(அ)** நகுதக் கனரே நாடுமீக் கூறுநர்
இளைய னிவனென வுளையக் கூறிப்
படுமணி யிரட்டும் பாவடிப் பணைத்தாள்
நெடுநல் யானையுந் தேரு மாவும்
படையமை மறவரு முடையம் யாமென்
றுறுதுப் பஞ்சா துடல்சினஞ் செருக்கிச்
சிறுசொற் சொல்லிய சினங்கெழு வேந்தரை
அருஞ்சமஞ் சிதையத்தாக்கி முரசமொ
டொருங்ககப் படேஎ னாயிற் பொருந்திய
என்னிழல் வாழ்நர் சென்னிழற் காணாது
கொடியனெம் மிறையெனக் கண்ணீர் பரப்பிக்
குடிபழி தூற்றுங் கோலே னாகுக
ஓங்கிய சிறப்பி னுயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் றலைவ னாக
உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பிற்
புலவர் பாடாது வரைகவென் னிலவரை
புரப்போர் புன்கண் கூர
இரப்போர்க் கீயா வின்மையா னுறவே.

<u>வினாத்தொகுதி:01</u>

(i) இப்பாடல் இடம்பெறும் திணையையும் துறையையும் விளக்குக.

(ii) இப்பாடலில் பின்வரும் தொடர்கள் எவ்வெப் பொருள்கயில் கையாளப்பட்டுள்ளதெனக் குறிப்பிடுக.

- நகுதககன்ர்
- மீக்கூறுநர்
- உளையக் கூறுதல்
- சிறுசொல்

(iii) பாண்டியன் தலையாலங்கானத்து செருவென்ற நெடுஞ் செழியனை பகைத்த அரசர்கள் இழிவாகக் கூறிய வார்த்தைகள் யாவை?

(12 புள்ளிகள்)

<u>வினாத்தொகுதி:02</u>

(i) இப்பாடலில் புலவர் வெளிப்படுத்த விளைந்த விடயத்தைக்குறிப்பிட்டு விளக்குக.

(ii) பாடல் வெளிப்படுத்தும் விழுமியக்கருத்துக்கள் யாவை?

(iii) தலையாலங் கானத்து செரு வென்ற பாண்டியன் நெடுஞ்சழியன் கூறிய வஞ்சின வார்த்தைகள்யாவை?

(12 புள்ளிகள்)

வினாத்தொகுதி:03

(i) ஓர் அரசனை இழிவுபடுத்தும் கீழ்மை உணர்வுகள் என நெடுஞ்செழியனின் உள்ளத்தில் ஊறி நின்றவை யாவை?

(ii) அரசர்க்கு உரியதாகக் கூறப்படும் சிறப்புகள் தொடர்பாக இப்பாடலில் வெளிப்படும் அம்சங்கள் யாவை?

(iii) இப்பாடலில் வெளிப்படும் சங்ககால புறத்திணை மரபுகளை எடுத்துக்காட்டுக.

(12 புள்ளிகள்)

வினாத்தொகுதி:04

(i) இப்பாடலில் உள்ள மேல்வரும் சொற்களின் பொருள்களை குறிப்பிடுக.

- சமம்
- நிலைஇய
- புரப்போர்
- புன்கண்

(ii) பாடலில் வெளிப்படும் சங்ககாலத்து பண்பாட்டு அம்சங்கள் என நீர் கருதுபவை யாவை?

(ii) தலையாலங் கானத்து செரு வென்ற பாண்டியன் நெடுஞ்செழியனின் தன்மான உணர்வும், வீரமும் வெளிப்படுத்தும் விதத்தினை எடுத்துக்காட்டுக.

(12 புள்ளிகள்)